கூடுதல் மகளிர் நீதிமன்றம் (நீ.ந.நிலை), தேனி.

*DEPOSITION OF WITNESS –Crl. Misc.39*

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Calandar Case .No. 112/2017**

Deposition of witness for Petitioner: L.W / P.W.

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. ராஜேஸ் |
| கணவர்/ தந்தை பெயர் | : | இளங்கோவன் |
| தொழில் | : | டிரைவர் |
| கிராமம் | : | அன்னஞ்சி |
| தாலுகா / மாவட்டம் | : | தேனி |
| வயது | : | 33/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14/08/2026

*( எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். பிரிவு 355 BNSSன் படியான மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. சாட்சி காவல்துறையினரால் அடையாளம் காட்டப்பட்டார்.)*

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். வழக்கில் எதிரி முனீஸ்வரனை தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொழுத்து என்னுடையது தான். அத்தாட்சியில் உள்ள 1வது கையொழுத்து என்னுடையது தான். கடந்த 2016ம் வருடம் நான் அல்லிநகரம் காவல்நிலையத்திற்கு சென்றபோது போலீசார் கையொப்பம் கேட்டதால் கையொப்பம் செய்து கொடுத்தேன்.வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது, போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை</u>**

கடந்த *02.09.2016*ம் தேதி அதிகாலை *03.30* மணிக்கு நானும், அருண்பாண்டியனும் பெரியகுளத்தில் உள்ள *RMTC* டிப்போ அருகே இருந்தபோது அல்லிநகரம் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் முனீஸ்வரன் என்பவரை கைது செய்தார் என்றும் அவர் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதில் கடந்த *2016*ம் வருடம் மார்ச் மாதம் தானும், இன்னும் *5* நபர்களும் சேர்ந்து அல்லிநகரத்தில் உள்ள ஜெயம் நகர் சிவன் கோவில் அருகே ஒருவரது வீட்டில் பூட்டை உடைத்து தங்க நகை மற்றும் வெள்ளி நகைகளை திருடியதாகவும், அதன்பின்*2016*ம் வருடம் ஆகஸ்ட் மாதம்

*NGO* காலணி ராமலிங்க நகரில் ஒருவரது வீட்டில் வெள்ளி நகை மற்றும் தங்க நகைகளை திருடியதாகவும், அவரது வீட்டிற்கு வெளியே இருந்து நீல நிற அல்ட்டோ காரை திருடிச்சென்றதாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதன்பின் எதிரி முனீஸ்வரனுடன் வத்தலகுண்டுவில் உள்ள அவரது வீட்டிற்கு சென்று அவர் எடுத்து வந்த *TN60L0489* என்ற நம்பர் பிளேட்டை போலீசார் அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நானும், அருண்பாண்டியனும் கையொப்பம் செய்தோம் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டும், குறுக்கு விசாரணை செய்ய முன் வராததால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை

JAYABHARATHI DURAI

Signed by
Digitally signed by JAYABHARATHI DURAI
Date: 2026.08.14 12:03:52 +0530